*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VIII (1)**
**December- 2023**

# ஸ்ரீபதியின் சிறுகதையில் பெண்நிலைப்பாடு

செல்வஈஸ்வரி, கு
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
எஸ்.எ.ஃப்.ஆர். மகளிர் கல்லூரி,
சிவகாசி.

**Corresponding Author's mail ID: Selvaanand2008@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு சமூக முன்னேற்றத்தின் வழிகாட்டியாக விளங்குவது பெண்நிலைப்பாடாகும். பொறுமையின் அடையாளமாகத் திகழும் பெண்கள், அமைதியான குணத்துடன் சிக்கலான சவால்களை எளிதாக சமாளிக்கும் திறன் கொண்டவர்கள். கடினமான சூழ்நிலையை நம்பிக்கையுடன் கையாளும் திறனை இளமை முதலே இயல்பாகப் பெற்றிருப்பதால் நடைமுறையில் காணப்படும் சமூக சிக்கல்களை ஆற்றலோடு அணுகி இல்லறத்தை இனிதாக மேம்படுத்திடும் ஆற்றல் பெற்றவர்கள் பெண்கள். பன்முகங்களாக பரிமாணிக்கும் பெண்ணினத்தை மையப்படுத்தி படைக்கப்பட்டிருக்கும் சிறுகதைகளை மிகச் சிலனவே. பெண்பாத்திரங்களை இனங்கண்டு பெண்நிலைப்பாடு பற்றி படைப்பாளர் ஸ்ரீபதியின் சிறுகதையிலிருந்து வெளிக்கொணர்வது என்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்**

**தன்மானத்துடன் வாழும் தாயின் பண்பு, வரதட்சணைக் கொடுமை, குடும்ப வன்முறை, பாலியல் துன்புறுத்தல், முதலாளித்துவம், வாடகைத்தாயாக மாறின் ஏற்படும் இன்னல்கள்**

## முன்னுரை

மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்பார் கவிமணி. இந்த உலகில் கருவைத் தாங்கி, கல்லறைவரை உறவோடு உறவைப் பின்னிப் பிணைத்து இயக்கும் ஆற்றல் பெண்மைக்கு உரியதாகும். பஞ்ச பூதங்களில் மாற்றங்கள் நிகழ்ந்தால் கூட, நற்சமூகத்தை வழி நடத்தும் சக்தி பெண் தான். அவளின் சாதனை அளப்பரியது. இத்தகு புனிதத் தன்மை வாய்ந்த பெண்ணின் நிலையை, ''பறவையாடிப்பழகு'' என்ற ஸ்ரீபதியின் சிறுகதை வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தாயே மகனை வெறுத்தல்

ஒரு தாயின் உள்ளம் தன் மகனை நற்பண்பாளன் எனப் பிறர் புகழப் பெருமை கொள்வது தாயின் உள்ளம் ஆகும். இதனை வள்ளுவர்,

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்டதாய்"1**

என்கிறார். தவறு செய்யும் போது மகனைக் கண்டு பெருமிதம் கொள்ளாமல் தட்டிக் கேட்கும் தாயின் பண்பு உன்னதமானது. அந்த வகையில்

"லூசுக்கிழவியும் ரேசன் அரிசியும்" என்னும் சிறுகதையில் ஒரு தாய் தன்னுடைய மகன் தவறான வழியில் செல்லும் போது அவனைத் தண்டிக்கின்றாள். இதனை,

"….எம் மவனுக் குரேசன் கடைகள்ல திருட்டு அரிசியைக் கொள்முதல் பண்றது தான் வேலை ……" இந்நேரம் என் வீட்டுக்காரர் மட்டும் உயிரோட இருந்து இந்த சங்கதி தெரிஞ்சதுன்னா பெத்த புள்ளைன்னு கூட பார்க்காம சுட்டுப்புடுவார். என்னாலையும் தாங்கமுடியல. துணிஞ்சி விசத்தை ஒருநாளு கலந்துட்டேன்."

(ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, பக்.29-30)"

என்ற வரிகள் காட்டுகின்றன. இதன் வாயிலாக, ஸ்ரீபதி மனசாட்சிக்குக் கட்டுப்படாமல் குற்றம் செய்தவனுக்கு மரணதண்டனை வழங்கும் தாயின் வீரச்செயலைப் படைத்துக்காட்டி, நம்மை வியக்கவைக்கின்றார். தவறு செய்தவன் தன்மகன் என்று தெரிந்தும் நீதி வழங்குவதில் பாகுபாடின்றி விவேகத்துடன் செயலாற்றும் பெண்மையின் துணிவு இங்கு புலனாகின்றது. இக்கருத்தானது, கவிமணியின்

"நீதிநெறி நில்லா வம்பருமே- நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவர் ஆர்?
ஓதிய மானம் இழந்தவரை உயர்
உத்தமர் ஆக்க முயல்பவர் ஆர்?"2

என்ற பாடலடிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. நீதியை நேர்பட நிலைநாட்டும் பொறுப்பு பெண்மைக்கே உரிய தனிச்சிறப்பு ஆகும் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

பிறர் தன்னை அவமானப்படுத்தினாலும், தனது கௌரவத்தை விட்டுக்கொடுக்காது வாழும் தாயின் வைராக்கிய உணர்வினை,

"அன்னையில இருந்து இன்னைக்கி வரைக்கும் அவன் கட்டுன வீட்டுக்குள்ள போகல. அவன் சம்பாத்தியத்துல கைநனைக்கல. என தனது வீரவாழ்க்கையை விவரித்தாள் கிழவி."

(ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, ப.30)"

இங்கு, கணவன் இறந்த பின்னும் தன் வாழ்வின் ஆதாரமாக விளங்கும் மகனை ஏற்றுக்கொள்ளாது, உழைத்துப் பொருளாதாரச் சுதந்திரத்தோடு வாழும் பெண்ணாக கிழவியெனும் கதாபாத்திரத்தைப் படைத்து, தனித்து தன்மானத்தோடு வாழ்தல் தவறுல்ல என்பதை ஸ்ரீபதி தன் படைபபின் மூலம் உணர வைக்கிறார்.

இன்றைய குடும்பச் சூழலில் பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலை அதிகரித்து வருகின்றது. இளமைத் தொடங்கி முதுமை வரை தன்கையே தனக்கு உதவி என்ற அடிப்படையில் பெண்கள் அனைவரும் தானாகவே உழைத்து முன்னேற்றம் அடைகின்றனர்.

பெண் பல்வேறு இன்னல்களைக் கடந்து படித்து, பணிக்குச் சென்றாலும் அவளை போகப் பொருளாகவே பார்க்கப்படுகின்ற அவலநிலை இன்றளவும் நிலவுகின்றது. ‘‘பலானமனிதர்கள்’’ என்னும் சிறுகதையில் தந்தையை இழந்த பெண், பொருளாதார நெருக்கடியால் தவறு செய்யும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றாள் என்பதை சுட்டிக்காட்டுகின்றார். ஊதியத் தொகை பெண்ணை விட ஆணுக்கே அதிகமாக வழங்கப்படுவதும் இது ஒரு காரணமாக அமைகின்றது. பெண் மனம் திருந்தி நல்லொழுக்கத்துடன் வாழ முற்பட்டாலும் ஆணாதிக்கச் சமூகம் அவளைத் தவறான கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றது. இதனை,

‘‘நானும் ஒருமாசமா ஏறாத கம்பெனி இல்லை. எல்லாவனும் நெத்தி நிறைய பட்டையை போட்டு மனசை இன்னும் சாக்கடை உள்ள குட்டையாத்தான் வச்சிருக்கானுக. நான் திருந்தக்கூடாதுனு எதிர்பார்க்கிறானுக. திருந்தாம இருந்தா வச்சிக்குவானுகளாம். வேலைக்கு இல்ல. ஒரு நாளைக்கு மட்டும்….’’

(ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, ப. 50)’’

என்ற வரிகளில் பெண்ணின் மனக்குமுறலைப் பதிவு செய்துள்ளமையைக் காணலாம். தெய்வமாகப் போற்ற வேண்டிய பெண்களை விலைமாதர்களாகச் சித்தரிப்பது என்பது கீழான இழி செயலாகும் எனபதையும் கதையாசிரியர் இடித்துரைக்கின்றார்.

மணமகனின் இயலாமைக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் சீதனமாக வரதட்சணை இருக்கின்றது. ஒரு சில திருமணங்களில் நகை, பணம், நிலம் போன்றவற்றை வரதட்சணையாகக் கேட்கும் முறை இன்றும் நடைமுறையில் உள்ளது. வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் இறுதியில் வெல்வது மரணம் மட்டுமே. கல்வியறிவு பெற்றிருந்தாலும் குடும்பச்சூழல் காரணமாக வரதட்சணை கொடுக்க முடியாமல், பெண்கள் வாழ்விழந்து ஆதரவற்றிருக்கும் நிலையினை,

‘‘ஐந்தாயிரம் ரூபாய் வரதட்சிணை மற்றும் ரெண்டு பவுன் நகைக்காக கணவனால் கை விடப்பட்டதை மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டேன்’’.

(ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, ப.61)’’

என்ற தொடர்கள் புலப்படுத்துகின்றன. பணம் இல்லை என்றால் பெண் பிணத்திற்குச் சமமானவள் என்பது போல, பெண்களின் வாழ்வு கேள்விக்குரியாகின்றது. தன்னுடைய குடும்பச் சூழல் காரணமாக பெண் வாடகைத் தாயாக மாறும் நிலைமை இன்று நடைபெறுகின்றது. இதனை ஏற்க மறுக்கும் கணவன் அவளை விட்டு பிரிந்து செல்கிறான். இதனால் பெண்ணின் வாழ்க்கை ஒளி இழந்து உணர்ச்சியற்ற நடைபிணமாக இறுதியில் மாறுகின்ற நிலையினை,

‘‘எவன் கூடவோபடுத்து புள்ளையப் பெத்துக் குடுத்துதுட்டு வாங்கிட்டு வருவ….. உங்கூட நான்வாழணும்………என்னோட வாழ்க்கை தான் அவுஞ்சிபோச்சி. அதை ஒண்ணும் செய்யமுடியாது. எங்கூடப் பொறந்ததுகளாவது நல்லா இருக்கட்டும். அதுக்காக என்னோட உயிரையே கொடுக்கிறதுன்னாலும் நான் கொடுப்பேன். இனி நான் வாழ்றதே அவங்களுக்காகத் தான் எனக்கென்ன குழந்தையா,? குட்டியா ?’’

(ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, ப.62)’’

என்ற வரிகள் பதிவு செய்கின்றன. மேற்கண்ட தொடர் வாடகைத்தாயாக மாறிய பெண்ணை இன்றைய சமூகம் வெறுக்கின்றது என்பது தெளிவாகின்றது.

மது, மாது போன்ற தீயபழக்கங்கள் உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பவை ஆகும். குடி குடிப்பவரை மட்டுமல்லாது அவனைச் சார்ந்த குடும்பத்திற்கே கேடு விளைவிக்கும் ஆற்றல் கொண்டது. குடிப்பழக்கத்தால் குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டாலும் ஆண்கள் நிம்மதியாகவே இருக்கின்றனர். ஆண்களின் சுயநலத்தை,

> " பாட்டில் பொங்குது வீட்டில்
> பானை பொங்கல அவன்
> தன்னை மறந்திட குடும்பம்
> பசியை மறக்குது."4

என்ற இணையதள கவிதை காட்டுகின்றது. குடும்ப வறுமை கண்டு உள்ளம் உருகித்துடிக்கும் தன்மை பெண்மைக்கே உண்டு என்பதை ஸ்ரீபதியும்,

> "…..வாங்குற சம்பளத்தையெல்லாம் குடிச்சிடுறாரு. நாம ஒட்டலைன்னா புள்ளகுட்டிக பசியிலதான் கெடக்கும் என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு பெருமூச்சு விட்டாள் இராமாயி."
>
> (ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, பக்.74-75)"

என்ற வரிகளில் பதிவு செய்கின்றார். ஆணின் குடிப்பழக்கத்தால் குழந்தைகள் பசியில் வாடுகின்றனர். இந்த அவலநிலை இக்கதையில் வெளிப்படையாகப் பதிவு செய்யப்படுகின்றது. பணத்தைக் கண்டதும் அநியாயத்தை எதிர்க்க மறுக்கும் கணவனின் செயலால் வேதனை அடையும் பெண்ணின் நிலையை, தவறு செய்கின்ற ஆண்களைத் தட்டிக்கேட்க முடியாமல் பெண்கள் இன்றும் ஊமைகளாய் இருக்கின்ற நிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.

> "ஏது இம்புட்டு பணம்? ஒரே தடபுலா இருக்கு என்று முறைத்தாள் இராமாயி. காலையில திங்கத்துல சொத்துன்னு சோத்துல மண்ணு விழுந்ததுல. அதான் நேரா குவாரிக்கு சண்டை போடப் போனேன். மொதலாளியே இருந்தாரு. டக்குன்னு முந்நூறு ரூவா அள்ளிக்கொடுத்தாரு மவராசன் என்று சொன்னபடி சிகரெட்டை விட்டெறிந்து தள்ளாடித் தள்ளாடி வேப்பமரத் திண்ணையில் குப்புறப்படுத்தான். இப்படி ஜென்மங்க இருக்கிறவரைக்கும் புழுதிச்சோறு தான் திங்க முடியும். என்று மனதிற்குள் நினைத்தாலும் இராமாயியால் வெளியில் சொல்ல முடியாது. சொல்லி விட்டு அடியார் வாங்குவது?"
>
> (ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, ப. 78)"

என்ற வரிகளில் அறியலாம். ஆண்களை எதிர்க்க முடியாமல் பெண்கள் அடிமைப்பட்டு ஊமைகளாய் வாழ்கின்ற நிலை இன்றும் தொடர்கதையாய் இருக்கின்றது. "அச்சம் தவிர்" என்ற பாரதியின் வரிகள் வெற்றுவார்த்தையாக ஏட்டில் எழுதப்பட்டது போல இக்கதையில் காட்டப்பட்டுள்ள பெண்ணின் நிலையும் ஏட்டில் எழுதப்பட்டது போலவே உள்ளது.

**முடிவுரை**

ஸ்ரீபதியின் சிறுகதையில் மகனைத் திருத்த தாயே விஷம் கொடுக்கின்ற செயலைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. கற்பரசியாக விளங்கும் பெண் வாடகைத் தாயாக மாறினால் அவள் வாழ்வு துன்ப நிலையை அடையும் என்பதனை இக்கதையில் தெளிவாக அறியமுடிகின்றது. பெண்ணின் கைகளை நம்பிதான்

குடும்பவாழ்வும் சமூகமும் இயங்கும் என்பதை ஸ்ரீபதியின் இச்சிறுகதை வெளிக்கொணருகின்றது. இன்பமின்றி துன்பமே இறுதிப் பயணமாகும் பெண்நிலைப் பாட்டினை பிறிதோர் அணுகுமுறையில் ஆய்வு செய்யும் பணியினைத் தொடர இக்கட்டுரை வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**அடிக் குறிப்புகள்**

1. மகேஸ்வரி, திருக்குறள் மூலமும், தெளிவுரையும், குறள் எண்., 69
2. பெருமாள் அ.கா., கவிமணியின் கவிதைகள், பாடல் அடிகள்-745
3. வேளாங்கண்ணி அ., குடி குடியைக் கெடுக்கும் கவிதை (எழுத்து. காம்)

**துணை நூற்பட்டியல்**


1. ஸ்ரீபதி, பறவையாடிப்பழகு, கோவேந்தன் பதிப்பகம், 219, சிவகாசி.
2. மகேஸ்வரி, திருக்குறள் மூலமும், தெளிவுரையும் – மகேஸ்வரி ஆப்செட்காலண்டர்ஸ், சிவகாசி- 626 123.
3. பெருமாள் அ.கா., கவிமணியின் கவிதைகள், ஸ்ரீசெண்பகாபதிப்பகம், சென்னை, நவம்பர் 2002.